D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.132/2019

**P.W**.3 (LW4)

| | |
|---|---|
| Name | : திரு. சுகுமார் |
| Father/Husband Name | : திரு, சுப்பிரமணி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது முகையூர் கிராமத்தில் குடியிருந்து கல்பாக்கம் ECR ரோட்டில் உள்ள SS மோட்டார் கடையில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன நேதாஜி என்பவரை தெரியும். விபத்தில் காயம்பட்ட விக்னேஷ் என்பவரை எனக்குத் தெரியும்.

2) கடந்த 12.04.2018 காலை 11.00 மணியளவில் எனது கடையில் நான் வேலை செய்து கொண்டிருந்த போது என் கடைக்கு முன்பாக டமால் என்று சத்தம் கேட்டது. நான் வந்து பார்த்தபோது பைக்கில் வந்த இரு நபர்கள் பைக்குடன் கீழே விழுந்து கடந்தார்கள். அவர்கள் அரசு பேருந்து மோதியாதால் கீழே விழுந்திருந்தார்கள். நான் வந்து பார்த்தபோது விபத்தில் காயம்பட்ட நபர்கள் நேதாஜி மற்றும் விக்னேஷ் என்று தெரிந்துக்கொண்டேன். நேதாஜிக்கு தலையில் காயமும், விக்னேஷ் என்பவருக்கு கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. ரஷீத் என்பவரும் நேதாஜியின் அம்மாவிற்கு போன் மூலம் தகவல் சொன்னார். ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். மறு நாள் மருத்துவமனை சென்று

பார்த்தபோது நேதாஜி இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

டமால் என்று சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோதுதான் விபத்து பற்றி தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நேதாஜியின் அப்பா லோக நாதனை எனக்குத்தெரியும். விபத்தில் சிக்கிய இரு வாகனத்தில் 3 பேர் வந்தார்கள் என்றால் சரியல்ல. கோவர்தன் என்பவரும் அந்த வாகனத்தில் வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.